சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS. 21/2011**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09ம் நாள் திங்கட்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குணசேகரன் | தொழில் | விவசாயம் |
| தந்தை பெயர் | லேட். கிருஷ்ணமூர்த்தி | ஜாதி | |
| கிராமம் | ரெட்டிப்பாளையம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 70 |

**09.02.2026 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 14.02.1962 தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.02.1973 தேதியிட்ட ஆவண எண்.349/1973 கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.02.1973 தேதியிட்ட ஆவண எண்.348/1973 கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 05.07.2010 தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா எ சொத்திற்கான பட்டா எண்.844 கணினி பட்டா **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா எ சொத்திற்கான பட்டா எண்.186 கணினி பட்டா **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா எ சொத்திற்கான பட்டா எண்.5169 கணினி பட்டா **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.11.2010 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் மற்றும் அஞ்சல் ரசீது **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.